விலை ரூ. 10/=


# ஈழநாடு

வடக்கின் முதலாவது நாளிதழ்

Eelanadu

27.07.2020 திங்கட்கிழமை


## ‘தாயகம் – இறைமை – சுயநிர்ணயமே எமது இலக்கு’



திருகோணமலை, ஜூலை 1

எமது மக்களின் தாயகம், தனித்துவமான இறைமை கொண்ட தேசம் மற்றும் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைகள் சமரசத்துக்கு அப்பாற்பட்டவை. எமது மக்களின் நலன்களுக்கு மேற்குறித்த கோட்பாடுகள்

02




நாடாளுமன்றத் தேர்தல் - 2020 யாழ். - கிளிநொச்சி மாவட்டம்

6 X இலங்கை தமிழ் அரசுக் கட்சி (தமிழ் தேசிய கூட்டமைப்பு) 7 X

தருமலிங்கம் சித்தார்த்தன் பாலச்சந்திரன் கஜதீபன்




# நிரந்தர தீர்வை எட்டுவதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்துக



### தமிழ் மக்கள் தேசிய கூட்டணி விஞ்ஞாபனம்

வவுனியா, ஜூலை 27

இலங்கையில் தமிழ் மக்கள் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும் - ஒட்டுமொத்தமான ஓர் இனப்படுகொலையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் முரண்பாடுகளை களையும் விதத்திலும் ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வதற்கும் சர்வதேச கண்காணிப்பில் சர்வஜன வாக்கெடுப்பை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றிடம் கோருகிறோம்.

- இவ்வாறு க.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள்

02

## போராட்டத்தை அழிக்க கோட்டா உருவாக்கியதே இரணைமடு திட்டம்

### புதுக்கதை சொல்கிறார் சிறிதரன்



வடமராட்சி, ஜூலை 26

யுத்த நெருக்கடியை சமாளித்து எப்படி வன்னிக்குள் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை, யுத்தம் முடிந்தவுடன் கோட்டா பய ஆய்வு செய்தார். குளங்களும், அதைச் சுற்றிய பயிர்ச் செய்கை நிலங்களுமே விடுதலை போராட்டத்தை காப்பாற்றியது என்ற ஆய்வு முடிவு கிடைத்தது.

02

# சுமந்திரன், சிறிதரனுக்கு எதிராக தேர்தலின் பின்னர் நடவடிக்கை

## மாவை நேற்று அதிரடிக் கருத்து



யாழ்ப்பாணம், ஜூலை 27

“கட்சிக்குள் இருந்து கொண்டு சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்துள்ள வேட்பாளர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் தொடர்பில் எதிர்வரும் தேர்தலுக்குப் பின்னர் கட்சி நடவடிக்கை எடுக்கும். இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது தேர்தல் நேரம் பல பாதிப்புக்களைக் கொண்டு வரும். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கட்சிக்கு முறைப்பாடுகள் கிடைத்தால் தேர்தலுக்குப் பின்னர் கட்சி அது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்”

– இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா.

02

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 27

நாடளாவிய ரீதியில் கற்றல் நடவடிக்கைக்காக இன்று திங்கட்கிழமை பாடசாலைகள் திறக்கப்படுகின்றன. எனினும், தரம் 11, 12 மற்றும் 13 மாணவர்களுக்கு மட்டுமே கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

இதேவேளை கொரோனா தொற்று அச்சம் நிலவும் இராஜங்கனை பிரதேசத்தில் பாடசாலைகள் திறக்கப்படாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆரம்பிக்கப்படும் பாடசாலைகள் காலை 7.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை கற்பித்தல் நடவடிக்கைகளை

02

## இலங்கைக் கடற்படையை பலப்படுத்த இந்தியா உதவி

கொழும்பு, ஜூலை 27

இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்துவதற்குத் தேவையான எந்த உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாக இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகெத்தன்னவை தொலைபேசியில் தொடர்பு

02

## இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் கொடுக்கவேண்டும்

### வலியுறுத்துகிறார் சம்பந்தன்

திருமலை, ஜூலை 27

அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகம் இலங்கைக்குக் கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டிருந்த அவர், தீர்வுத் திட்டப்பாதையை

02







நாடாளுமன்றத் தேர்தல் - 2020 யாழ். – கிளிநொச்சி மாவட்டம்

தமிழ்த் தேசியத்தின் நேரிய பாதை
மக்கள் மனமறிந்த தலைமை

 6 X

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி

## தாயகம் - இறைமை...

அங்கீகரிக்கப்படுவது அடிப்படையானது.

நாம் எந்த நாட்டினதும் தேசத்தினதும், இனத்தினதும், இனக்குழுக்களினதும் நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர். மாறாக, எமது தேசத்தின் நலன்கள் பேணப்படும் வகையில் சிங்கள தேசத்துடனும் இந்தியா மேற்குலகு உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடனும் ஆரோக்கியமான இராஜதந்திர உறவுகளை கட்டியெழுப்ப விரும்புகின்றோம்

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

தமிழர் தலைநகர் திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது.

## சுமந்திரன், சிறிதரனுக்கு...

டான் தொலைக்காட்சியில் நேற்றிரவு ஒளிபரப்பான ஸ்பொட் லைட் நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

வேட்பாளர்களான சுமந்திரன், சிறிதரன் ஆகியோர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துகள் தொடர்பில் கட்சி இதுவரை அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதமை ஏன் என அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் நானும் தலைவர் சம்பந்தனும் எங்கள் எம்.பி. பதவிகளில் இருந்து விலகி இளைய தலைமுறையினருக்கு வழி விடுவதற்கான தீர்மானம் ஒன்றை விரைவில் எடுக்கவுள்ளோம். இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற தீர்மானம் எடுத்தபோதும் பின்னர் சில தவிர்க்கமுடியாத காரணங்களால்தான் இருவரும் முடிவை மாற்றி தேர்தலில் போட்டியிடுமாறு கோரப்பட்டோம்.

இருவரும் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்றுதான் இருந்தோம். ஆனாலும் உடனடியாக நாங்கள் இந்த முடிவை எடுப்பதால் நடைபெறவுள்ள தேர்தலில் அது கட்சிக்குப் பெரும் பாதிப்பாக அமையும் என்று கட்சிப் பிரதிநிதிகளும் மக்களும் எம்மிடம் எடுத்துக் கூறினார்கள். அத்துடன் இந்த முடிவால் கட்சிக்குள் இருக்கும் சிலரால் மத ரீதியான சில நடவடிக்கைகள் வலுப்பெறக்கூடும் என்ற எண்ணப்பாடு எழுந்தது. இதனால் தேர்தல் நேரத்தில் இது கட்சிக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்திவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டதால் முடிவை மாற்றி இருவரும் போட்டியிடுகின்றோம். ஆனாலும் இந்தத் தேர்தல் வெற்றியின் பின்னர் நாம் இருவரும் எம்.பி. பதவிகளை விட்டுக்கொடுத்து இளம் தலைமுறையினருக்கு சந்தர்ப்பம் வழங்கும் முடிவு ஒன்றை விரைவில் எடுப்போம்.

தமிழ் அரசுக் கட்சிக்குள் இம்முறை உட்கட்சி மோதல் வலுப்பெற்றுள்ளதே. அதற்குக் காரணம் என்ன? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், அது இந்த விருப்பு வாக்கு முறையால்தான் ஏற்பட்டுள்ளது ஆயினும் தமிழ் அரசுக் கட்சிக்குள் இப்படி ஒரு முரண்பாடு ஏற்பட்டமை குறித்து கவலை அடைகின்றேன்.

கட்சிக்குள் இருந்து கொண்டு சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்துள்ள சுமந்திரன், சிறிதரன் தொடர்பில் எதிர்வரும் தேர்தலுக்குப் பின்னர் கட்சி நடவடிக்கை எடுக்கும். இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது தேர்தல் நேரம் பல பாதிப்புக்களைக் கொண்டு வரும் என்று குறிப்பிட்டார் மாவை.

கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் வெளியிட கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பெற்றுக்கொண்டார்.

குறித்த நிகழ்வில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

## பாடசாலைகள்...

முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்க முன்னர் சுகாதார விதிமுறைகள் அனைத்தும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு ஓகஸ்ட் 10 ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை முதல் 31

ஆம் திகதி வெள்ளக்கிழமை பாடசாலைக்கு கட்டாயம் வருகை தர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## போராட்டத்தை...

இதையடுத்தே, இரணைமடு குடிநீர்த் திட்டத்தை கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்தினார்

இவ்வாறு புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சி.சிறிதரன்.

வடமராட்சி - வதிரியில் நேற்று நடந்த கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியை சேர்ந்த யாரும், யாழ்ப்பாணத்திற்கு இரணைமடு தண்ணீரை குடிக்க தர மாட்டோம் என ஒருபோதும் சொன்னதில்லை. இரணைமடு குளத்தின் கீழுள்ள 42 ஆயிரம் ஏக்கரில், 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யவே, இரணைமடு தண்ணீர் போதுமானது.

வன்னியில் 4இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் எப்படி யுத்த காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதை, யுத்தம் முடிந்ததும் கோட்டாபய ராஜபக்ச ஆய்வு செய்தார். மண்ணெண்ணெய் இல்லை, பெற்றோல் இல்லை, ஒருவிதமான பொருட்களும் அங்கு வரவில்லை. எப்படி அங்கு மக்கள் வாழ்ந்தார்கள் என்ற ஆய்வின் முடிவில், அங்குள்ள குளங்களும், குளங்களை சூழவுள்ள பயிர்ச்செய்கையும் அந்த மக்களையும், போராட்டத்தையும் தொடர்ந்து இருக்க வைத்தது என்பதை அறிந்தார்கள்.

இதை உடைப்பதற்கு என்ன வழி? யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை உருவாக்கினால், இங்கு முரண்பாட்டை உருவாக்கலாம். எமது பிரதேசங்களையும் மையப்படுத்தி

பேசினால் எடுபடக்கூடிய உணர்வுபூர்வமான விடயம் இது. இதை அரசாங்கம் வடிவாக செய்தது.

அதில் வேலை செய்பவர்களிற்கு வாகனம், இலட்சக்கணக்கான சம்பளம். அவர்கள் இதை பெரிய விடயமாக கொண்டு வந்தார்கள்.

அப்போதுதான் யாழ்ப்பாண பல்கலைகழக விரிவுயையாளர்கள் எம்மை அழைத்து பேசினார்கள். அவர்கள்தான் எமக்கு இதைப்பற்றிய அறிவை தந்தார்கள் என்றார்.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ச அப்படியொரு ஆய்வை மேற்கொண்டதாகவோ, அதன் முடிவு தொடர்பாகவோ இதுவரை இலங்கையில் எந்த ஊடகங்களிலும் செய்தி வெளியாகியிருக்கவில்லை. அதேநேரம், இரணைமடுக் குடிநீர் திட்டம் சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நான் விடுதலை புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தேன்

## சுமண ரத்ன தேரர் சொல்கிறார்



போர் காலத்தில் காயமடைந்த விடுதலைப் புலிகளை காப்பாற்றி அடைக்கலம் கொடுத்தேன். விகாரை அமைப்பதற்கு புலிகள் தமக்கு உதவினர் என்று மட்டக்களப்பு மங்களராமய அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த நேர்காணலில் அவர் தெரிவித்த புலிகள் பற்றிய விடயம் மட்டும் வருமாறு

"நான் மட்டக்களப்புக்கு 1993 இல் வந்தேன். எறத்தாழ 27 வருடங்கள் கடந்து விட்டது, நான் வருவதற்கு முன் இங்கு பௌத்த பிக்குகள் எவரும் இருக்கவில்லை. நானே விகாரையை உருவாக்கினேன் அப்போது எனக்கு உதவியவர்களில் அநேகர் தமிழர்களாவர். அதை விடக் கூடுதலாக உதவியவர், அந்நாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் மாவட்ட நிதிப் பொறுப்பாளராக இருந்த கௌசல்யனாவார்.

"நான் புலிகளோடு மிகவும் இணக்கமாக இருந்தேன். சிங்கள மக்களுக்கு அவர்களால் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பாதுகாத்து வந்தேன். அப்படி ஏதாவது வந்துவிட்டால் கூட பேசி தீர்த்துவைப்பேன். அதுமட்டுமின்றி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சில போராளிகள் காயமடைந்தால் இரகசியமாக பன்சாலையில் வைத்து வைத்தியம் பார்ப்பேன் என்று கூறியுள்ளார்.

## நிரந்தர தீர்வை...

தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டத்தில் வெளியிடப்பட்டது. அதன் முக்கிய விடயங்கள் வருமாறு,

ஈழத் தமிழர்களின் தொன்மை வரலாற்றை பறை சாற்றுவதாகவும் - இந்த நாட்டின் மீது தமிழர்களுக்கு உள்ள உரிமை - ஐரோப்பியரின் ஆட்சிக்குள் அடிமைப்படுதல் - சுதந்திரத்தின் பின்னான அஹிம்சை, ஆயுதப் போராட்டம் என தமிழர் வரலாற்றை அந்த விஞ்ஞாபனம் விபரிக்கிறது.

மேலும், தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசு நடைமுறைப்படுத்திய சட்டங்கள் - குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புகள் பற்றியும் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டுள்ளது.

தமிழினத்தின் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகள், இலங்கை இராணுவம் இழைத்த யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் கூறுகிறது. இந்தக் குற்றங்கள் சம்பந்தமான ஐ.நாவின் பங்கு பற்றியும் சாடியுள்ளது. அத்துடன் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு எதிராக தமிழர்கள் கையாண்ட நடவடிக்கைகள், அரசியல் உடன்பாடுகளை எட்ட எடுத்த முயற்சிகள், அரசியல் தீர்வுக்காக சர்வதேசம் எடுத்த முயற்சிகள், போர் காலத்தில் மக்களின் அவலங்கள், போர் முடிவின் பின்னரான நிலைமை, மாற்று அணியின் தேவை என்பன பற்றியும் விஞ்ஞாபனம் தெளிவாக விவரிக்கிறது.

இனப்பிரச்னை தீர்வு

தமிழ் மக்கள் பேரவை, வடக்கு மாகாண சபை தயாரித்த அரசியல் தீர்வு வரைபில் முன்வைத்து இணைந்த வடக்கு - கிழக்கில் இறைமையுடனான சுயாட்சியை பெறுவதே நோக்கம்.

முஸ்லிம்கள் தனியான ஓர் இனம் என்ற அடிப்படையில் அவர்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்பதுடன் மத சார்பற்ற வடக்கு - கிழக்கில் அவர்களுக்கும் உச்ச அதிகார பரவலாக்கம் என்பவற்றை இனப்பிரச்னைக்கான தீர்வாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முன்வைத்துள்ளது.

அத்துடன், இனப்படுகொலைக்கு பொறுப்புக்கூறல், அதற்கான நீதியைப் பெறல், வடக்கு, கிழக்கு சிங்கள மயமாக்கலை தடுத்தல், பௌத்த மயமாக்கலை தடுத்தல், இராணுவ மயமாக்கலை இல்லாமல் செய்தல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்று தமிழரின் பிரச்னைகள் குறித்தும் அவற்றுக்கான தீர்வு காண்பதற்கான வழிகள் குறித்தும் விஞ்ஞாபனம் தெளிவுபடுத்தியுள்ளது.

## இலங்கைக்...

கொண்டு உரையாடியபோது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் இரண்டு நாடுகளின் கடற்படைகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்தும் வலுப்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் 24 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகெத்தன்னவுக்கு, இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை அரசுக்கு...

வலுவாக்கக் கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றத்தில் முதல் கருமமாக தற்போது உள்ள அரசியல் சாசனம் சட்டபூர்வமானதாக இல்லாத காரணத்தினால், இந்த நிலைமை தொடருமாக இருந்தால் இலங்கை தோல்வியடைந்த நாடாக கருதப்படும்.

இன்று எமது முயற்சியின் காரணமாக நாங்கள் அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளையும் முக்கிய இராஜதந்திரிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியதன் காரணமாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கை அரசு அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதாக உறுதியளித்தது. ஆனால் அதனை இதுவரையு நிறைவேற்றவில்லை.

இந்த சூழ்நிலையில் அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு சர்வதேசம், இலங்கை அரசுக்கு கூடிய அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டும். அதற்கு எமது மக்கள் ஒரணியாக திரண்டு தமது ஆணையை எமக்கு தந்திருக்கிறார்கள். ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்துவதற்கு அதனை நிறைவேற்றுவதனை இனியும் தாமதப்படுத்தாமல் இருப்பதற்கு நாங்கள் பெரும் பலமான அணியாக நாடாளுமன்றம் செல்ல வேண்டும்-என்றார்.

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,782 | 12 | 665 | 75 | 2,106 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.07.2020 திங்கட்கிழமை
சார்வரி, ஆடி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# இனப்படுகொலைக்கான நீதி

இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை அவசியமென கனடாவின் புதிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் தெரிவித்திருக்கின்றார். அவர் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இது வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அவர் இதனை வெளியிட்டிருக்கின்றார். ஏனைய நாடுகளோடு ஒப்பிடும் போது, கனடாவில் ஈழத் தமிழர் ஆதரவு பலமாக இருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் ஈழத் தமிழ் சமூகம் கனடாவில் பலமாக இருப்பதே இதற்கான காரணமாகும். ஒரு நாட்டின் தேர்தல் அரசியலில் தலையீடு செய்யக் கூடிய மக்கள் தொகை இருக்கின்ற போதுதான், இவ்வாறான நிலைமை ஏற்படும். கனடாவில் இருப்பது போன்று, அமெரிக்காவிலும் தமிழ் மக்கள் பெருந்தொகையில் செறிந்து வாழ்ந்திருந்தால், அங்குள்ள அரசியல்வாதிகளும் ஈழத்தவர்களின் பிரச்னையை கையில் எடுத்திருப்பர். இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருந்த ஒருவர் இது பற்றி ஒருமுறை பேசியிருக்கின்றார்.

2015 பெப்ரவரி மாதம், வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றினார். ஆட்சி மாற்றம் இடம்பெற்றிருந்த சூழலில் விக்னேஸ்வரன் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை சம்பந்தன் தரப்பு ஆதரிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து, 2015 செப்ரெம்பரில் தமிழ் நாட்டு சட்டசபையில், முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமன் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இது பற்றியும் சம்பந்தன் தரப்பு வாய்திறக்கவில்லை. விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியபோதே, அதற்கு ஆதரவாக தமிழ் நாட்டு சட்டசபையிலும் அவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறான கோரிக்கைகளை தொடர்ந்தே முதலமைச்சர் ஜெயலலிதா இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார். விக்னேஸ்வரன் இந்தப் பிரேரணையை நிறைவேற்றாது, வேறு ஒருவர் முன்வைத்திருந்தால், அது பெரியளவில் கவனிப்பை பெற்றிருக்காது. ஏனெனில் விக்னேஸ்வரன் ஓர் ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர். அவரது இந்தப் பதவிநிலை அதிக கவனிப்புக்குரியது.

ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து இலங்கையின் மீதான சர்வதேச பார்வை தேய்வடையத் தொடங்கியதொரு சூழலில்தான், விக்னேஸ்வரன் இனப்படுகொலை தீர்மானத்தை முன்வைத்தார். இதனைத் தொடர்ந்துதான் இனப்படுகொலை என்பது ஒரு பேசுபொருளானது. இன்று எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட, இனப்படுகொலை என்பதும் தமிழர் அரசியலில் ஓர் அங்கமாகிவிட்டது. இனப்படுகொலை என்பது மக்கள் மயப்படுத்தப்பட்டுவிட்டது.


விக்னேஸ்வரன் மீது, எவர் என்னதான் விமர்சனங்களை முன்வைத்தாலும் கூட, இனப்படுகொலையை சர்வதேச மயப்படுத்தியதில் அவரது பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியதால்தான் விக்னேஸ்வரனுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் முரண்பாடுகள் வேர் கொண்டது. இதுவே பின்னர் விக்னேஸ்வரனை அரசியலிலிருந்து அகற்ற வேண்டுமென்னும் நிலைமையை தமிழ் அரசு கட்சிக்குள் ஏற்படுத்தியது. இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை என்பது மேடையில் பேசுவது போன்று இலகுவான விடயமல்ல ஆனால், தமிழ் மக்களுக்கான ஆகக் குறைந்த நீதியைக் கூட, சிங்கள அரசாங்கங்கள் தரமறுக்கின்ற நிலையில் தமிழர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சொல்லிக் கொண்டிருப்பதை தவிர வேறு என்னதான் செய்வது? ஆகக் குறைந்தது அதனைக் கூட தமிழர்களால் சொல்ல முடியாவிட்டால் தமிழர்களுக்கென்று தலைவர்கள் இருப்பதால் என்ன பயன்?

# பிரபாகரன் ஆயுதம் ஏந்தியமைக்கு தென்னிலங்கையர்களே காரணம்

## தேர்தல்கால ஞானம் சம்பந்தனுக்கு பிறந்தது

கொழும்பு, ஜூலை 27

தமிழின தலைவர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோரை தென்னிலங்கை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஏமாற்றி இருக்காவிட்டால் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதம் ஏந்தியிருக்க மாட்டார் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் அதன் திருமலை மாவட்ட தலைமை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணிலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்

இவ்விடயம் தொடர்பாக இரா.சம்பந்தன் மேலும் கூறியவை வருமாறு,

“இலங்கையில் 70வருடங்களாக இனப்பிரச்னை தீர்க்கப்படாது நீடித்து வருகின்றது. தமிழினத்தின் தலைவர்களான தந்தை செல்வநாயகம் மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோர் தென்னிலங்கை தலைவர்களுடன் பேச்சு நடத்தப் பலமுறை முயற்சி மேற்கொண்டனர். ஆனால், தென்னிலங்கை தலைவர்கள் அவர்களின் கோரிக்கைகளை நிராகரித்து ஏமாற்றினார்கள்.

இவ்வாறு மாறி மாறி நாட்டை ஆட்சி செய்த அனைத்து தென்னிலங்கை தலைவர்களும் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கவில்லை.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அது இடைக்கால அறிக்கை வரையில் சென்றடைந்தது. இவ்வாறு பல நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன.

அதாவது இனங்களுக்கு இடையில் பிரச்னைகளை தீர்க்க வேண்டுமாயின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அவை மீளப் பெறாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய வேண்டும். அதற்கு நியாயமான தீர்வொன்று சமஷ்டி அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும்.

இதனைத்தான் நாம் கோருகின்றோம். நாங்கள் நாட்டை பிரிக்கப்போவதில்லை. எனவே எமது கோரிக்கைகளை நிராகரிக்காது பேச்சுக்களை முன்னெடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

கடந்த காலத்தில் தந்தை செல்வா மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோரை தென்னிலங்கை தலைவர்கள் ஏமாற்றியமையால்தான் பிரபாகரன் ஆயுதமேந்தினார். அத்தகைய நிலைமை ஏற்படாதிருந்திருந்தால் அவர் ஆயுதமேந்தியிருக்க மாட்டார். இதனை தென்னிலங்கை தலைமைகள் முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும்” என்றார்.

# ‘இலங்கைத் தமிழும் தமிழரும்’ இணைய வழி ஆய்வு அரங்கம்

சென்னை, ஜூலை 26

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து முன்னெடுக்கும் இணையவழி ஆய்வரங்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் 21 ஆம் திகதி வரை வார நாள்களில் (சனி ஞாயிறு தவிர) தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை சூம் (Zoom) மென்பொருள் செயலி ஊடாக நடைபெறவுள்ளது.


“இலங்கைத் தமிழும் தமிழரும்“ என்ற பொருளில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 20 சான்றோர் பெருமக்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். முதல் 30 நிமிடங்கள் உரை அடுத்துவரும் 30 நிமிடங்கள் கலந்துரையாடல் என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை இடம்பெறும் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் வரலாற்றுத்துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் - கடந்த காலத் தமிழரின் நிலை என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் கலந்து பயன்பெற முடியும்.

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



தேர்தல் செய்திகள்

# எமது அபிலாஷைகளுக்காக ஒன்றுபட்டு உழைக்கும் தளத்தை உருவாக்குவோம்

## தமிழ் மக்கள் பேரவை மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தேர்தல் அரசியல் கடந்து எமது அபிலாஷைகளுக்காக ஒன்றுபட்டு உழைக்கும் ஒரு தளத்தை உருவாக்கு வோம். அதற்காக ஒன்றிணைவோம்.

இப்படி அழைப்பு விடுத்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

நடைபெறவுள்ள தேர்தலில் “யாருக்கு வாக்களிப்பது? தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாடு“ என்ற ஊடக அறிக்கையை அந்த அமைப்பு நேற்று வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

70 வருடங்கள் கடந்தும் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது உரிமைப் போராட்டங்களிலே நாம் சுமந்த வலிகளும், இழப்புக்களும், வேதனைகளும் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் உயிர்கொடுத்து காத்து வரும் எமது அடிப்படை அபிலாஷகள் போலி சலுகைகளுக்கும், பகட்டுக்கும் விலைபோகக்கூடியவை அல்ல.

நாம் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையால் இதுவரை காலமும் நாம் சாதித்தது எதுவுமில்லை. எதிர்காலத்திலும் இந்த எண்ணிக்கையால் எமக்கு ஆகப்போவது எதுவும் இல்லை. ஆனால் அங்கு ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தெரிவிக்கப்படும் எமது நிலைப்பாடுகளும், கருத்துக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது நாம் எத்தனை பிரதிநிதிகளை அனுப்புகின்றோம் என்பதிலும் பார்க்க என்ன நிலைப்பாடுடையவர்களை அனுப்புகின்றோம் என்பதே முக்கியத்துவமாகின்றது.

எமது அபிலாஷைகள் என்ன என்பதை தமிழ் மக்கள் பேரவையினராகிய நாம் தீர்வுத் திட்டமாக எழுத்துருவில் வடித்து வெளியிட்டிருந்தும், அதன் அடிப்படைகளை இதயசுத்தியுடன் வலியுறுத்த திராணி அற்றவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்ய முடியாது.

எமது பிரச்னைகளை உணர்வுபூர்வமாக உணராதவர்களால் பிரச்னைகளை நியாயபூர்வமாக அணுகமுடியாது. நாம் எமது பொது நோக்கங்களை கருத்தில் கொள்ளாது சுயலாபத்திற்காக வாக்களிப்போமாக இருந்தால், நாம் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளும் சுயநலத்திற்காக இயங்குவதைத் தடுக்கமுடியாது போய்விடுவதுடன் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களும் எமது கருத்துக்களாக கொள்ளப்படும் அபாயம் இருக்கின்றது.

எம் வாக்குகளை பெற்று நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பதற்குப் பதிலாக இனி வாக்களித்த பின் நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று சிந்திப்போம், செயலில் இறங்குவோம்.

எமது அபிலாஷைகளை உள்வாங்கி, புரிந்துணர்வுடன் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் விடயங்களை அணுகி அதை முன்னகர்த்தக்கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்வது எமது வரலாற்றுக் கடமையாகும்.

எமது வாக்குரிமை பலத்தைக் காட்டவும், விலை போன வாக்குகளை செல்லாக் காசாக்கவும், வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்க முழுமுயற்சி எடுப்போம். சரியான பிரதிநிதிகளை தெரிவுசெய்ய தவறாது சென்று வாக்களிப்பதுடன் எமது மூன்று (03) விருப்பு வாக்குகளையும் பதிவிடுவோம்.

எமக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயரால் உண்மையாகவும் ஒற்றுமை உணர்வுடனும் நேர்மையாகவும் தூ ய அரசியலை முன்னெடுத்து எமது நிலைப்பாடுகளை அஞ்சாது வலியுறுத்தி முன்னேறக்கூடியவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்வோம் -என்றுள்ளது.

# எமக்கே வெற்றி நிச்சயம் மூன்றிலிரண்டு சந்தேகம்

## அரசேறியதும் எதிரணி வரும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூலை 27

“நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவதுதான் கேள்விக்குறி.”



- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் கள நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 150 ஆசனங்களைப்பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான் மையுடன் ஆட்சி அமைக்கும் என்பது தற்போதைய நிலைமையில் கடினம்தான். எனினும், அதுவே எமது இலக்கு என்ற நோக்குடன் எமது பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தேர்தலில் நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவதுதான் கேள்விக்குறி. தேர்தலில் இந்த இலக்கை நாம் அடையா விட்டாலும் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் வரும் எதிரணி உறுப்பினர்களில் எம்முடன் சேர விரும்புவர்களை இணைத்தாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை சபையில் நிரூபித்துக் காட்டுவோம்.

எதிரணியில் இருக்கும் அடிப்படைவாதிகள் எவரை யும் அரசுடன் இணைக்கவே மாட் டோம். தூய்மையான - பெரும்பான்மைப் பலத்துட னான அரசையே நாம் விரும்பு கின்றோம். அதுவே ஜனாதிபதி யினதும் விருப்பம்” - என்றார்.

# வேட்பாளர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 27

நுவரெலியா மாவட்டத் தில் சுயேச்சைக் குழு 02 இல் மாம்பழம் சின்னத்தில் போட் டியிடும் கனகரத்தினம் ராஜா என்ற வேட்பாளர் குண்டர்களி னால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்துள்ளார்.

பொகவந்தலாவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிழங்கன் வைத்திய சாலையில் மாற்றப்பட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 08.30 மணியளவில் ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியின் சென்.ஜோன் டிலரி பகுதியில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்திய 05பேர் கொண்ட குண்டர்கள் முகத்தை மூடிய நிலையில் தடிகளை கொண்டு தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனக் காயங்களுக்கு உள்ளான வேட்பாளர் கனகரத்தினம் ராஜா தெரிவித்தார்.

# கூட்டமைப்பின் கருத்தை ஆமோதிக்கின்றார் சஜித்

கொழும்பு, ஜூலை 27

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் இராணுவமே செய்கின்றது. இந்தநிலையில், அங்கு நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதில் நியாயம் இருக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாடெங்கும் சிவில் நிர்வாக நடவடிக்கைளில் இராணுவத்தின் பங்களிப்பும் தலையீடும் இருக்கின்றன. ஆனால், வடக்கு-கிழக்கின் நிலைமை படுமோசமாகவுள்ளது. அங்கு சிவில் நிர்வாகம் செய்யவேண்டிய அனைத்து வேலைகளையும் இராணுவமே செய்கின்றது.

அதுமட்டுமன்றி அங்கு பாதுகாப்பு என்ற போர்வை யில் வீதிகள் எங்கும் இராணு வத்தினர் நிலைநிறுத்தப்பட் டுள்ளனர். இராணுவத்தினரின் பிரசன்னம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்தநிலையில் வடக்கு, கிழக்கில் நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதில் நியாயம் இருக்கின்றது.

நாட்டின் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார். அவரின் உத்தரவுக்கமையவே முப்படையினர் செயற்படுகின்றனர்.

தற்போது நாடு இராணுவ ஆட்சியில் சிக்கித் தவிக்கின்றது என்பது கண்கூடு. எனவே, பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்-என்றார்.

# தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மண்டபத்தில் நடந்த நிகழ்வில் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.



கூட்டணியின் தலைவரும் வேட்பாளரு மான க.வி.விக்னேஸ் வரன், வேட்பாளர் களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், அனந்தி, சிவசக்தி ஆனந்தன் ஆகியோருக்கு மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவம் அளிக்கப்பட்டது.




# தீர்வு கிடைத்தாலும் - கிடைக்காவிடினும் மறுநாளே அரசியலிலிருந்து விலகுவேன்

## ‘அமிர்தலிங்கம் பாணியில்’ சுமந்திரன் பேச்சு



யாழ்ப்பாணம், ஜுலை 27

“தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கப் பெற்ற மறுநாளே நான் அரசியலில் இருந்து விலகி விடுவேன். அந்தத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க என்னால் முடியவில்லை என்றாலும் அடுத்த நாளே அரசியலில் இருந்து விலகுவேன்.”

இவ்வாறு கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன்.

நான் முழுநேர அரசியல்வாதியாக இருக்க விரும்பவில்லை. தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவே அரசியலுக்கு வந்தேன் என்றும் இதன்போது அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் பாராளுமன்ற தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் கருத்தாடல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

நாட்டின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையில் புதிய அரசமைப்பு ஒன்று தேவையாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். அவரது அந்த உரையை வைத்தே நான் தற்போதைய அரசுக்கு தேவையான நேரங்களில் ஒத்துழைப்புக்களை வழங்குவதாக கூறியிருந்தேன். அதாவது எமது நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட்டு எமது விடயங்களும் உள்ளடக்கப்பட்டால் அவர்களுடன் இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

தேர்தல் சூழ்நிலையில், தமிழர்கள் கேட்கும் தீர்வை வழங்க மாட்டோம் என்று அரச தரப்பினர் தென்னிலங்கையில் கூறுகின்றனர். ஆனால், தேர்தலின் பின்னர் அவர்களில் மன மாற்றம் ஏற்படலாம். ஏனெனில் நாம் இப்போது கடுமையான சூழ்நிலைக்குள் இருக்கின்றோம். அதற்காக இத்தனை நாட்களாக கஷ்டப்பட்டு பெற்றுக்கொண்டதை இழக்க முடியாது. அவர்களுக்கு எம்மால் சில தேவைகள் ஏற்படக் கூடும். அப்போது சந்தர்ப்பத்தை நாம் முழுமையாக பயன்படுத்துவோம்.

தற்போது ஆட்சியில் இருக்கும் அரசு ஓர் தீர்வுத் திட்டத்தை கொண்டு வந்தால் அதனை சிங்கள மக்கள் எதிர்க்க மாட்டார்கள். அதேபோல தற்போது இரு அணிகளாக பிரிந்துள்ள சஜித் , ரணில் தரப்புக்கள் எதிர்க்கட்சியினராக வந்தாலும் அவர்களும் எதிர்க்க மாட்டார்கள். ஏனெனில் இடைக் கால வரைபை உருவக்குவதில் அவர்களின் பங்கும் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக தற்போதைய ஆளும் தரப்பினரின் ஆதரவுடனேயே இடைக்கால வரைபு அன்றைய காலத்தில் வெளியில் வந்தது - என்றார்.



கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதி பகுதிகளில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வேட்பாளருமான மாவை சேனாதிராசா நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அவருடன் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் பெ.கனகசபாபதி, உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# விடுதலை வேட்கைக்காக உருவான வீட்டை மக்களே உடைக்கக்கூடாது

## கூட்டமைப்பை ஆதரிக்க கேட்கிறார் செல்வம்

விடுதலை என்ற வேட்கையோடு வீட்டை உருவாக்கிய தமிழ் மக்கள் அதனை உடைத்தார்கள் என்ற வரலாறு உருவாகக்கூடாது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரும் வன்னி மாவட்ட வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பை மௌனிக்க செய்வதற்காகவே வன்னியில் அதிகம் பேர் களம் இறக்கப்பட்டுள்ளார்கள். இந்த அபாய நிலையை உருவாக்கியது. மஹிந்தவும் கோட்டாவுமே. கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவதற்கான சூழ்ச்சியாகவே இவற்றை பார்க்க முடியும்.

இன்று அனைவரும் கூட்டமைப்பை விமர்சிக்கின்றனர். எனினும் இந்த பகுதியிலே இராணுவ சோதனை சாவடிகளை அமைத்து அடக்கு முறைகளை மேற்கொள்ளும் அரசாங்கத்தை யாரும் விமர்சிக்க முன்வரவில்லை. அதனை கூட்டமைப்பு மாத்திரமே எதிர்த்து வருகின்றது. பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் களம் இறக்கப்பட்டுள்ள நிலையில் எமது தேசியத்தை நசுக்க நினைக்கின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சரியான பாடத்தை நாம் புகட்டவேண்டும். இது ஒவ்வொருவரதும் கடமை. அற்ப சொற்ப சலுகைகளிற்காக எமது உரிமைகளை நாம் விட்டுக்கொடுக்க முடியாது.

விடுதலை என்ற வேட்கையோடு வீட்டை உருவாக்கியவர்கள் எமது மக்கள். எமது மக்களே அதனை உடைத்தார்கள் என்ற வரலாறு வரமுடியாது. எனவே உங்கள் வாக்கினை எமது பூர்விகம் சிதைக்கப்படுவதற்கு பாவிக்க போகின்றோமா அல்லது எமது மண்ணை அபகரிப்பதற்கு பாவிக்க போகின்றோமா என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

பட்டினி கிடந்தாலும் தமிழர்கள் தமது இறையாண்மையை விட மாட்டார்கள் என்ற வகையில் உங்கள் வாக்குரிமையை நீங்கள் பயன்படுத்த வேண்டும். போராட்டத்திற்காக தன்னை அர்பணித்த இனம் தமிழினம். இந்த வன்னி மாவட்டம் எமது வரலாற்றை சுமந்திருக்கின்றது. எனவே, இவர்களை தண்டிப்பதற்கான வாய்ப்பு வெகுவிரைவில் வரும். நாம் அது வரை ஒற்றுமையாக இருக்கவேண்டும். வடக்கின் அபிவிருத்தி விடயத்தில் இந்தியாவையும், புலம் பெயர் உறவுகளையும் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், எமது முன்னாள் முதலமைச்சர் அதனை செய்யவில்லை. தமிழர்களிற்கு கடமைசெய்ய வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்கு அதிகம் இருக்கின்றது - என்றார்.

# இப்படி சொன்னார்கள்....!

### மக்கள் மீதான அச்சமே சுமந்திரனின் பாதுகாப்பு அதிகரிப்பு

தம்பி சுமந்திரன் முன்பு 10 பீல்ட் பைக்கள் சகிதம் வலம் வந்தவர், இப்போது 20 பைக்களில் விசேட அதிரடிப் படை காவல் வழங்க நடுவில் திரிகிறார்.

எங்கே பொது மக்கள் தம்மை கேள்வி கேட்பார்களோ அல்லது எள்ளி நகையாடுவார்களோ அல்லது தமக்கு எதிராக சிறிய வன்முறைகளை பிரயோகிப் பார்களோ என்ற பயத்திலேயே இவ்வாறு கூடுதல் பாதுகாப்பு உதவிகளை பெற்றிருக்கின்றார்கள் என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.



**அராலி பிரசார கூட்டத்தில்...!**
**க.வி. விக்னேஸ்வரன்**

### தொல்பொருள் செயலணியால் வேதனை அடைகிறேன்

தொல்பொருள் செயலணி தொடர்பாக மனவேதனை அடைகின்றேன். இந்த நாட்டில் ஆட்சி செய்கின்றவர்களும் - செய்ய இருப்பவர்களும் நான் பாராளுமன்றம் செல்வதில் பயத்தில் இருக்கின்றனர். காரணம் தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்னைகளை அவர்கள் மொழியில் நான் எடுத்துக் கூறும்போது பாராளுமன்றம் சென்றவர்கள் இதுவரையும் செய்யாததையிட்டு அவர்கள் வெட்கப்படுவார்கள், அரசியலில் மட்டுமல்ல நிர்வாகத்துறையில் இருப்பவர்களும்கூட....



**மட்டக்களப்பு செய்தியாளர் சந்திப்பில்...!**
**சுமணரத்ன தேரர்**

### நாம் பலமாக பாராளுமன்றம் சென்றால் தீர்வை பெறுவோம்...!

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் எழுபதாயிரம் வாக்குகளை அளிப்பதன் மூலம் இரு ஆசனங்களை கைப்பற்றமுடியும். அரசியல் தீர்வு சம்பந்தமாக நாங்கள் முன்னெடுத்து வந்த செயற்பாடுகளில் முன்னேற்றம் இருக்கின்றது. நாங்கள் பலமாக பாராளுமன்றம் செல்வோமானால் எம்மால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.




**திருமலை கூட்டத்தில்...!**
**இரா. சம்பந்தன்**

### தமிழன் மீசையை இழக்கவில்லை

தமிழர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட இடம் அளிக்காமல், தேசியப் பட்டயிலில் இடமளிக்கப்படும் என்று மொட்டு அணியினர் கூறுகின்றனர்.

தேசியப் பட்டியலில் நியமிக்கப்படும் பிரதிநிதியே தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று எதிர்பார்க்கும் அளவிற்கு தமிழர்கள் தங்களின் மீசைகளை இழந்து விடவில்லை. தமிழன் இன்னமும் மீசை வைத்த தமிழனாகவே இருக்கிறான்.



**கலாநிதி ஜனகன்**
**ஐக்கிய மக்கள் சக்தி**

### நாடு தமிழனுக்கே சொந்தம்

கடைசித் தமிழன் இந்த நாட்டில் வாழும்வரை இந்த நாடு தமிழனுக்கு செந்தமானது. இது சிங்கள - பௌத்த நாடு என எனது கட்சியும் ஏற்றுக்கொள்ளாது. நானும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.



**இரா. சாணக்கியன்**
**மட்டக்களப்பு செய்தியாளர் சந்திப்பில்**

# தமிழர் கௌரவமாக வாழ்வதற்கு சர்வஜன வாக்குரிமை அவசியம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்



வவுனியா, ஜூலை 27

தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு அவர்களிடத்தில் சர்வஜன வாக்குரிமை ஒன்றை நடத்தி உலக நாடுகளின் மூலம் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கினாலே நாம் நிம்மதியாக வாழமுடியும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் உபதலைவர்களில் ஒருவரான க.சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டமைப்பில் இருந்தபோது அரசால் எமக்கு பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. அந்த உறுதிமொழிகளைக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அது நிறைவேறவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசின் பங்காளிகளாகச் செயற்பட்டுவந்த கூட்டமைப்பினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கிவந்த பிரச்னைகளில் ஒன்றுக்காவது தீர்வைப் பெறமுடிந்ததா என்றால் இன்றுவரை இல்லை என்பதே உண்மை.

பிரபாகரன் கேட்பதை நீங்கள் கேட்டால் ஒருபோதும் தரமுடியாது என்று அவர்கள் கூறுகின்றார்கள். தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கேட்டால் அது தீவிரவாதம், தனிநாட்டு கோரிக்கை என்று நீண்டகாலமாக அவர்கள் கூறுகின்றார்கள். தனிநாடு கேட்டு தமிழர்கள் போராடியது உண்மை.

ஆனால் இன்று ஜனநாயகப் போராட்டத்தில் இருக்க கூடியவர்கள் சொல்கின்றார்கள் நாடு பிளவுபடாமல் இருப்பதற்கு ஒருமித்த நாட்டுக்குள் தமிழர் தங்களது ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசியல் அமைப்புமுறைவேண்டும் என்று.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சமஷ்டிக்கும் தனிநாட்டுக்கும் எவ்வாறான வேறுபாடுகள் இருக்கின்றன என்பது நன்கு தெரியும். ஆனால், அதனைக் கொடுக்க முடியாது என்று அவர்கள் கூறுகின்றார்கள். சிங்கள அரசு இறங்கிவந்து தமிழ்மக்களின் இனப் பிரச்னையை ஒருபோதும் தீர்க்காது.

இலங்கை அரசால் சம்பந்தன் தொடர்ந்து ஏமாற்றப்பட்டிருந்தார். புதிய அரசியல் சாசனத்திற்காக நான்கரை வருடங்கள் ஏமாற்றபட்டார்கள். நீங்கள் ஏமாற்றப்படுகின்றீர்கள் என்று நாம் சொன்னோம். ஆனால் சுமந்திரனோ, மாவையோ, சம்பந்தனோ அதனை கேட்கவில்லை. ஆனால் இன்று ஏமாற்றப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இந்த மண்ணில் தமிழர்களாக நாம்வாழ வேண்டும். எமது சந்ததிநிலைக்க வேண்டும் என்றால் எமது இருப்புக்கள் பாதுகாக்கப்படவேண்டும் -என்றார்.

# வடக்கின் அபிவருத்திகள் யாருக்காக செய்யப்பட்டன?

## கேள்வி எழுப்புகிறது தமிழர் விடுதலை கூட்டணி



வடக்கில் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்திகளை எமது மக்கள் பயன்படுத்தக்கூடிய சூழல் இல்லை. அப்படியானால் இந்த அபிவிருத்திகளை கடந்த ஆட்சிக்காலத்தில் இருந்தவர்கள் யாருக்காக செய்தார்கள்?

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் ச. அரவிந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மயிலிட்டி பிரதேச மக்களை சந்தித்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் அபிவிருத்தி செய்தோம் என்று கடந்தகால அரசாங்கமும் அதில் இருந்தவர்களும் கூறிவருகின்றனர். ஆனால், செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகளை தமிழ் மக்கள் பயன்படுத்தக் கூடியதாக உள்ளதை யாராவது சிந்தித்தார்களா என்பதே இன்றைய கேள்வி.

மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால், எங்கள் கடற்றொழிலாளர்கள் அதைப் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. ஆனால், மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதே வெளிப்பாடு. நமது கடற்றொழிலாளர்கள் பயன்படுத்த முடியாத சூழ் நிலையே மயிலிட்டியில் உள்ளது.

எமது பிரதேசங்களில் இடம்பெற்ற அபிவிருத்திகள் இவ்வாறே இடம்பெற்றுள்ளன. இத்தகைய அபிவிருத்திகள் தேவையா?, இந்த அபிவிருத்திகள் யாருக்கானவை?, அபிவிருத்திக்கு நாங்கள் தடையில்லை. ஆனால், இங்கு நடைபெறும் அபிவிருத்திகள் எமது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் நடைபெறவேண்டும் என்பதே வேண்டுகோள். இந்த கோரிக்கை எல்லோருக்குமானது. மக்கள் இந்த விடயங்களில் கூடிய அக்கறை செலுத்தி தேர்தலின் போது சரியான முறையில் தமது வாக்குபலத்தை பயன்படுத்த வேண்டும் - என்றார்.

# சிறைக்குள் போதைப்பொருள் வீசிய நான்கு பேர் மாட்டினர்!

கொழும்பு, ஜூலை 27

நீர்கொழும்பு சிறைச்சாலையின் மதிலுக்கு மேலாக போதைப்பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களை சிறைச்சாலைக்குள் எறிந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்கே நபர்களில் 19 மற்றும் 21 வயதான இரண்டு யுவதிகளும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலைகள் திணைக்களம், பொலிஸாருக்கு வழங்கிய அறிவித்தலுக்கு அமைய நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகளின் பின்னர்



சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கதிரான மற்றும் ஏத்துகால பகுதிகளை சேர்ந்தவர்களே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கும் இடையில் தொடர்புள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# வடக்கு வர்த்தக ஊழியர் சங்கம் யாழ்ப்பாணத்தில் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்கும் முகமாக வடக்கு மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் மீள ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் ரிம்பர் மண்டபத்தில் இந்தச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

“இனிவரும் காலங்களில் அரச துறைகளில் பணியாற்றும் ஊழியர்களை போல தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்களைப் பேணும் முகமாக இந்த அமைப்பு செயற்படும். இந்த அமைப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு வர்த்தக சங்கம் மற்றும் வேறு பல தடைகள் காரணமாக செயற்பட முடியாதிருந்தது. எனினும் இன்றைய தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சங்கம் தொடர்ச்சியாக எந்த தடை ஏற்படினும் செயற்படும்” எனச் சங்கத்தின் உபதலைவர் பா.லக்சன் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தூர இடங்களிலிருந்து வந்து தனியார் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் பெண்கள் 5 மணிக்குப் பின்னரும் கடமையில் ஈடுபடுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. எனினும் அவர்களுடைய நலன் தொடர்பில் இதுவரை எவரும் கவனம் செலுத்தாத நிலை காணப்படுகின்றது.

அத்தோடு அரச சேவையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பொது விடுமுறை மற்றும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கும் நிலை காணப்படுகின்றது. எனினும் தனியார் துறையினருக்கு அவ்வாறான விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை. இனிவரும் காலங்களில் இது தொடர்பில் ஊழியர் சங்கம் கூடிய கரிசனை செலுத்தும்” எனவும் அவர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் தலைவராக க.சிவகுமாரும் உப தலைவராக பா.லக்சனும் செயலாளராக ர.அஜந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு ஆயுதம் தாங்கிய இராணுவ பாதுகாப்பு!

கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி தப்பியோடியதை அடுத்து கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் இடங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

ஏற்கனவே பொலிஸார் பாதுகாப்பு கடமையில் உள்ள நிலையில் அவர்களுக்கு மேலதிகமாக ஆயுதமேந்திய இராணுவத்தினரும் கடமையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.



குறிப்பாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைகளுக்கான பாதுகாப்பே இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



# ஈழத்தின் நீதிக்கான குரல் நீதியரசர் விக்னேஸ்வரனே

## தமிழ்நாடு உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி

யாழ்ப்பாணம், ஜூலை 27

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராக போட்டியிடும் நீதியரசர் விக்னேஸ்வரன் தேர்தலில் வெற்றி பெறவேண்டும். இவ்வாறு தமிழ்நாடு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் அரிபரந்தாமன், விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வழக்கறிஞர்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நேர்வுகள் வரலாற்றில் உள்ளன. ஆனால், ஒரு நீதியரசர் தன்னுடைய பணிக்காலத்திற்கு பின், மிகவும் துடிப்பு மிக்க ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை முன்னரங்கில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பது ஆசியாவில் இதுவே முதல் முறை.

அளப்பரிய ஈகங்களை செய்து மிகப்பெரிய இழப்புகளுக்கு உள்ளாகி அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் நீதிக்காகவும், விடுதலைக்காகவும் பணியாற்றும் கடமையை வரலாற்று அன்னை தங்கள் தோளில் சுமத்தியிருக்கிறாள்.

இறைமையுள்ள தனியரசே, தமிழரின் விருப்பம் என்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான தேர்தலாக 1977 நாடாளுமன்றத்தேர்தல் அமைந்தது. அதில், மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பெயராலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்தனர்.

அதுபோல, இனக் கொலைக்கு நீதி பெற பன்னாட்டுப் புலனாய்வும், அரசியல் தீர்வுகாண தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என வடமாகாண சபையில் தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீதான தேர்தலாக 2020 நாடாளுமன்ற தேர்தல் அமைந்துள்ளது.

நல்லாட்சி, நல்லரசாங்கம், மீளிணக்கம் என்பவை எல்லாம் கட்டுக்கதைகள் என்று அம்பலமாகிவிட்டது. புதியயாப்பொன்று வருமென்று சிங்களத் தரப்பு சொன்னது சொன்னதாக இருக்கிறது. 2015-இல் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30ஃ1 தீர்மானத்தில் இருந்து தாம் விலகிக்கொள்வதாக இலங்கை அரசு இவ்வாண்டு அறிவித்துவிட்டது.

“காணாமலாக்கப்பட்டோர் அனைவரும் உயிருடன் இல்லை இறப்புச் சான்றிதழ் வாங்கிக்கொள்ளுங்கள்” என்று கோட்டாபயசொல்லிவிட்டார். பன்னாட்டு மன்றத்தில் காலத்தை இழுத்தடிப்பதற்கு, ரணில்-சிறிசேன தலைமையிலான அரசு துணை நின்றதன் மூலம் இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கும் ராஜபக்ஷக்களைக் காப்பாற்றியவர்களாக தமிழ் பிரதிநிதிகள் காட்சித் தருகின்றனர்.

எனவே, தமிழ் மக்களின் நீதிக்காகவும் தமிழ்த்தேசத்தின் இறைமைக்காகவும் பாடுபடாதவர்களையும் சிங்கள அரசைப் பாதுகாத்து கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்குத் துணை போகிறவர்களையும் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்புவதால் தமிழர்களுக்கு அழிவுதான் ஏற்படும்.

நீண்ட போராட்ட அனுபவத்தைக் கொண்ட ஈழத் தமிழர்கள் தமது பட்டறிவில் இருந்து சரியான நபர்களைத் தெரிவு செய்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மக்களை கை விட்டு தன்னலனை முன்வைத்து தேச நலனைப் பலியிட்டு எதிரியிடம் விலை போனவர்கள் புறக்கணிக்கப்பட்டு தங்களுடைய தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி பெரு வெற்றி ஈட்ட வேண்டும் என உளமார வாழ்த்துகிறேன்.

# அரச அதிகாரிகள் பக்கச்சார்பு; நீதியான தேர்தலுக்கு பாதிப்பு

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

அரச அதிகாரிகள் பக்கச்சார்பான விதத்தில் நடக்கிறார்கள் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) குற்றஞ்சாட்டியுள்ளது.

சில உயர் அரச அதிகாரிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் பரப்புரை நடவடிக்கைகளில் பங்கெடுப்பது குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“தேர்தல் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் முக்கிய பதவிகளை வகிக்கக்கூடியவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்வதும் ஆதரிப்பதும் சுதந்திரமான நீதியான தேர்தலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

தேர்தல் ஆணைக்குழு மேற்பார்வை மற்றும் நிறைவேற்று தரத்தில் உள்ள அதிகாரிகள் பரப்புரையில் ஈடுபடக்கூடாது வேட்பாளர்களை ஆதரிக்கக்கூடாது. ஆனால், விதிமுறை மீறப்படுகின்றது.

இந்த விதிமுறையை மீறும் அதிகாரிகள் சுதந்திரமான - நீதியான தேர்தலுக்கு உதவ வேண்டும்” - என்றார்.

# 20 சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியருக்கு நீதிமன்று விளக்க மறியல்

கொழும்பு, ஜூலை 27

தொலைக்காட்சி ரியலிட்டி ஷோ நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய சிறுவர்கள் பலரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில், தொலைக்காட்சி மேடை வடிவமைப்பாளர் என கருதப்படும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸாரும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து முன்னெடுத்த விசேட விசாரணைகளில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர் நேற்று நுகேகொட - கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் ஆகஸ்ட் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம்

உத்தரவிட்டது. இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் விசேட அவதானம்

செலுத்தி விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், குறித்த நபரால் 20

இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகத்திற்கு

உட்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

அவ்வாறு சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் குறித்த நபர், அதனை வீடியோ படமெடுத்துள்ளமையும், சில வீடியோக்கள் ஆபாச வீடியோ காட்சிகளைப் போன்று சிறுவர்களை

பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந் நிலையிலேயே 54 வயதான குறித்த நபரை கைது செய்த பொலிஸார், மேலும் சிலரை கைது செய்ய விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# யாழ். இளைஞன் பாரிஸில் கொலை!

பாரிஸ், ஜூலை 27

யாழ்ப்பாணம்-தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஒருவர் பிரான்ஸில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார் எனத் தெரியவருகிறது.

பாரிஸின் புறநகர்ப் பகுதியில் வசித்து வந்த தியாகராஜா சுதாகரன் (வயது -43) என்பவரே கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இவரது சடலம் அவரது வீட்டில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக கூறப்படுகிறது.

அண்மையில் வீட்டு வாடகை தொடர்பில் உரிமையாளருடன் இவருக்கு பிரச்னை ஏற்பட்டதையடுத்து கடந்த புதன்கிழமை இவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். இந்த நிலையில், வீதியில் நின்ற இவரைப் பொறுப்பேற்ற பொலிஸார் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இவரது சடலம் வியாழக்கிழமை அவரது வீட்டில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாக வீட்டு உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இவரது தலை, முகம், கழுத்துப் பகுதிகளில் பலத்த காயங்கள் காணப்பட்டன எனத் தெரிய வருகின்றது.

# தேர்தல் கடமைகளில் ஈடுபடுவோர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுவர்



கொழும்பு, ஜூலை 27

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதனால் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தேர்தல் நாளில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை வாக்களிக்க முடியும் .

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் வாக்களிக் வசதியாக எந்த சட்ட விதிகளும் இல்லை. சிறை வளாககங்களில் உள்ள கைதிகள், நோயாளிகள் வாக்களிக்கம் செயன்முறையே இதற்கு உதவுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மக்கள் வாக்களிக்க வசதி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதனால் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இராணுவம் கவனம்

கொழும்பு, ஜூலை 27

இராணுவத்தினர் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குருவிட்டவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டு மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தினரின் பொறுப்பு என்று கூறியுள்ள அவர், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இராணுவத்தினர் சுகாதாரப் பாதுகாப்புடன் இருப்பது முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது அனைத்து இராணுவத்தினருக்கும் உள்ள பொறுப்பாகும் என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.



# யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

# நாடாளுமன்றத் தேர்தல் 2020

## வடமாகாண வெங்காயமும் அரசியல்வாதிகளும்



மேடையில் உணர்ச்சி பூர்வமாகப் பேசி வாக்குறுதிகள் வழங்கி நாடாளுமன்றம் சென்று, காலத்தை வீணடித்து, மக்களை இன்னமும் துன்பத்தில் வைத்திருக்கும் நம் அரசியல்வாதிகளைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

எமது தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் ஜெனீவாவுக்குச் சென்று தீர்வுகாணுவோம் என்று கூறும் எமது தமிழ் அரசியல்வாதிகள் ஏன் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும்? நீங்கள் அவர்களுக்கு வழங்க வேண்டியது நாடாளுமன்றம் செல்ல வாக்குகள் அல்ல, சர்வதேசம் செல்ல வேண்டிய விசா அனுமதியும் விமானப் பயணச் சீட்டு மாத்திரமே.

கிணற்றில் தொலைத்ததை சமுத்திரத்தில் தேடும் எமது அரசியல்வாதிகளின் 70 ஆண்டு கால தீர்வு வாக்குறுதிகளை நீங்கள் நம்புகிறீர்களா?

கட்சிக்குள் குழு அமைக்கும் மத்தியகுழு, செயற்குழு என்று சகல செயற்பாடுகளுக்கும் குழு அமைத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க குழு அமைத்தார்களா?

20 ஆண்டுகளாக இருக்கும் அரசியல்வாதிக்கு சம்பாதிக்க பணத்தையும் தேடிய சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு மக்கள் ஆணை தேவைப்படுகிறது. உங்கள் வாக்குகளை அவர்களுக்கு அளித்தால் தங்களுடைய சொத்துக்களை மேலும் பன்மடங்காக்கி, உங்களை அடக்கி ஆள்வார்கள். இதற்காகவா நீங்கள் வாக்களிக்கப்போகிறீர்கள்?

எம் தமிழ்மக்களின் சொத்தை ஆக்கிரமித்து அபகரித்த அரசியல்வாதிகள் உங்கள் சொத்துக்களை மீட்டுத் தருவார்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

விடுதலைப் போராளிகளுக்கு தண்டனை வழங்கிய நீதியரசர் தற்போது அவர்களைப் போற்றி தலையில் தூக்கிவைத்து கொண்டாடும் நாடகம் உங்களுக்குப் புரிகிறதா?

வீணாகப் போகின்ற இரணைமடுத் தண்ணீரை வட பகுதி மக்கள் குடிப்பதற்கு விநியோகிப்பதை தடை செய்த அரசியல்வாதியை மறக்கமாட்டோம்! மன்னிக்கவும் மாட்டோம்!

சாதாரண அரச உத்தியோகத்தராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாடமாளி கைகளுக்கும், ஏக்கர் கணக்கான காணிகளுக்கும் பலகோடி ரூபாய் சொத்துக்களுக்கும் சொந்தக்காரர்களாகியது எப்படி?

புலி வேடம் பூண்டு, புலியாய் பேசி நாடாளுமன்றம் சென்றவர்கள் வாய் கட்டிய பூனைகள் போல் நாடாளு மன்றத்தில் நரித்தந்திரத்தை தங்கள் தேவைக்கு பயன்படுத்தி மீண்டும் 60 மாதத்தில் வருவார்கள். நீங்களும் வயிற்றைக்கட்டி உங்கள் குழந்தைகளையும் பாதாளத்துக்குள் தள்ளப்போகிறீர்களா?

தங்கள் பாதுகாப்புக்கு பெரும்பான்மை இனப் பாதுகாப்புப் படையினரை வைத்திருக்கும் தமிழ் அரசியல் வாதிகள் முதலில் அதனை அகற்றுங்கள். அதன்பின்னர் படையினரை வெளியேற்றுவதற்கான கோரிக்கையை முன்வையுங்கள்!

யாழ்ப்பாணத்து வெங்காயம் காரமானது. நமது அரசியல்வாதிகள் வாய்ச்சொல்லில் காரமானவர் கள். வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்குவேட்டை செய்து, நாடாளுமன்றம் சென்று, ஐந்தாண்டுகளின் பின் சாதித் தவைகளை திரும்பிப் பார்த்தால் உரித்த வெங்காயம் போல் ஒன்றுமே இருக்காது. உரித்தவர்களுக்கு கண்ணீர் மாத்திரமே மிஞ்சியது!

**முதலில் கை சின்னத்திற்கும் உங்கள் மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மற்றைய மூன்றாவது விருப்பு வாக்கை எமது கை சின்னத்தில் போட்டி இடும் நீங்கள் விரும்பியவருக்கு அளித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு அதேசமயம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்வதன்மூலம், வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.**





**‘உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!’**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க!**

# விண்ணன்

## ப.வரதராஜசிங்கம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன்
உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
பகல்
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
பரத் நடிப்பில்
555
விக்ரம் பிரபு நடிப்பில்
வீர சிவாஜி



திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து

**இரவு**
7.00 மணி : சொற்சமர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
யோகி பாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Music HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
**இரவு**
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 - தமிழ்
6.00 மணி - தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 - கணிதம்
7.30 மணி - தரம் 09 - தமிழ்
8.15 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
**இரவு**
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 சிவாய மந்திரம்
6.00 சுப்ரபாதம்
07.00 இன்றைய சிந்தனை
07.05 இன்றைய நாள்
07.20 சின்மய சிந்தனை
07.30 மங்கள இசை
08.00 அருளுரை
08.30 திருவாசகம்
09.00 நல்லூர் திருவிழா 2ம் நாள் மாலைத்திருவிழா மறுஒளிபரப்பு
10.00 நல்லூர் திருவிழா 3ம் நாள் பகல் திருவிழா நேரலை
**பகல்**
11.30 பக்திமலர்
12.30 திருவிழா
4.30 நல்லூர் திருவிழா 3ம் நாள் மாலைத்திருவிழா நேரலை
**இரவு**
7.00 அருளுரை
7.30 திருவாசகம்
08.00 நல்லூர் திருவிழா 3ம் நாள் மாலைத்திருவிழா மறுஒளிபரப்பு

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
**பகல்**
12.00 மணி - ஜெபமாலை
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.00 மணி - நிதர்சனம்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2020 அன்று வெளியிடப்பட்டது.